# செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்

(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
40, சாலைப் போக்குவரத்து நிறுவன வளாகம், நூறடிச் சாலை, தரமணி, சென்னை – 600113

# CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL

(An Autonomous Insitution under Ministry of Education, Government of India, New Delhi)
40, IRT Campus, 100 Feet Road, Taramani, Chennai - 600113
Website : www.cict.in E-Mail : director@cict.in
Phone : 044 - 22540124


கோ.எண். 11-264/செ.த.ம.நி./2020-21/குடியரசுத் தலைவர் விருதுகள் நாள்: 05.03.2021

பொருள்: செம்மொழித் தமிழுக்கான குடியரசுத்தலைவர் விருதுகள் (2020-2021) - தொல்காப்பியர் விருது (1), குறள் பீடம் விருது (2), இளம் அறிஞர் விருது (5) - முன்மொழிவுகள் வரவேற்பது – தொடர்பாக.

*****

மதிப்பிற்குரியீர்,

தமிழ் மொழி, இலக்கியம், பண்பாடு ஆகியவற்றின் மேம்பாட்டிற்கான தலைசிறந்த பணி செய்துள்ள பேரறிஞர்களைப் பாராட்டுதற்காகவும், இளம் அறிஞர்கள் மேலும் தமிழியல் ஆய்வில் ஈடுபட்டுப் பெரும்பங்களிப்பைச் செய்ய ஊக்குவிப்பதற்காகவும் இந்திய அரசு செம்மொழித் தமிழுக்கான மத்தியத் திட்டத்தின்கீழ் எட்டு விருதுகளை வழங்க அனுமதி அளித்துள்ளது. எட்டு விருதுகளில், ஓர் இந்திய அறிஞருக்கான விருது தொல்காப்பியர் பெயரிலும், இரு விருதுகள் (ஒன்று அயல் நாட்டவருக்கும் மற்றொன்று அயல்நாட்டில் வாழும் இந்தியருக்கும்) குறள் பீட விருதுகள் என்னும் பெயரிலும், ஐந்து விருதுகள் 30 முதல் 40 வயது வரையுள்ள (விண்ணப்பங்கள் அலுவலகத்தைச் சேரும் இறுதி நாளில்) இளம் அறிஞர்களுக்கு இளம் அறிஞர் விருது என்ற பெயரிலும் வழங்கப்படும். விருதுகள் பற்றிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

1. தொல்காப்பியர் விருது (மதிப்புச் சான்றிதழ், நினைவுப் பரிசு, ஐந்து இலக்கம் ரூபாய் பரிசுத் தொகை ஆகியவை இதில் அடங்கும்) - ஆண்டுதோறும் ஓர் இந்திய அறிஞருக்கு ஒரு விருது.
2. குறள் பீடம் விருது (மதிப்புச் சான்றிதழ், நினைவுப் பரிசு, ஐந்து இலக்கம் ரூபாய் பரிசுத் தொகை ஆகியவை இதில் அடங்கும்) - ஆண்டுதோறும் இரு விருதுகள் – அயல் நாட்டவருக்கு ஒன்று, அயல்நாடு வாழ் இந்தியருக்கு ஒன்று.
3. இளம் அறிஞர் விருது (மதிப்புச் சான்றிதழ், நினைவுப் பரிசு, ஓர் இலக்கம் ரூபாய் பரிசுத் தொகை ஆகியவை இதில் அடங்கும்) - ஆண்டுதோறும் ஐந்து விருதுகள். இவ்விளம்பரத்தின் இறுதிநாளுக்குள் முப்பது வயதிற்கும் நாற்பது வயதிற்கும் இடைப்பட்ட இந்திய இளம் அறிஞர்களுக்குரியது.

விருதுகளுக்கான தகுதிகள்:

செவ்வியல் தமிழ் மொழிக்கும், இலக்கியத்திற்கும் அரிய பங்களிப்புச் செய்த புகழ்பெற்ற அறிஞர்களை அடையாளம் கண்டு போற்றும் நோக்கத்துடன் இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன. கி.பி. 600 வரையுள்ள செவ்வியல் தமிழின் பல துறைகளில் தேர்ந்த ஆராய்ச்சி நூல்கள் எழுதிப் பெரும்பெயர் பெற்ற விண்ணப்பதாரர்களே இவ்விருதுகளுக்கு உரியவராவர். இலக்கியம், இலக்கணம், மொழியியல், மொழிபெயர்ப்பு, வரலாறு, நுண்கலைகள், கட்டடக்கலை, தொல்லியல், நாணயவியல், கல்வெட்டியல், சுவடியியல் மற்றும் பண்பாடு ஆகிய துறைகளில் 1950 முதல் 2021 வரை (2020-21) பதிப்பிக்கப்பெற்றுள்ள நூல்களே கணக்கில் எடுத்துக்கொள்ளப்பெறும். விருதுகளுக்கான நெறிமுறைகள் யாவும் கீழே தரப்பட்டுள்ளன.

நெறிமுறைகள் :

1. பண்டைக்காலம் தொடங்கி கி.பி.600 வரையிலான தமிழியல் சார்ந்த இலக்கியம், இலக்கணம், மொழியியல், மொழிபெயர்ப்பு, வரலாறு, நுண்கலைகள், கட்டடக்கலை, தொல்லியல், நாணயவியல், கல்வெட்டியல், சுவடியியல் மற்றும் பண்பாடு முதலிய துறைகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் விருதுபெறத் தகுதியுடையவை.

2. இந்தியா அல்லாத ஏதேனும் வேறு நாட்டினுடைய கடவுச்சீட்டு (செல்லுநிலையிலும் நடப்பிலுமுள்ளது) உடையவர் அயல்நாட்டவராவார்.

3. இந்தியாவின் கடவுச்சீட்டு உடையவரும் இந்தியா அல்லாத ஏதேனும் வேறு நாட்டில் வாழ்ந்துவருபவருமான ஒருவர் அல்லது முன்பு இந்தியக் குடிமகனாக இருந்து பின்பு வேறொரு நாட்டின் குடியுரிமை பெற்றிருக்கின்ற ஒருவர் அயல்நாடு வாழ் இந்தியராவார்.

4. இந்திய அரசின் அனைத்துத் துறைச் செயலாளர்கள், மாநில, ஒன்றியப் பகுதிகளின் தலைமைச் செயலாளர்கள், கல்வித்துறைச் செயலாளர்கள், இந்திய அரசின் அனைத்து வெளியுறவுத் துறைத் தூதரகத் தலைவர்கள், பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள், பேராசிரியர் நிலையிலுள்ள துறைத் தலைவர்கள் மற்றும் கடந்த ஆண்டுகளில் தொல்காப்பியர், குறள்பீடம் விருதுபெற்றவர்கள் மட்டும் தகுதியுடைய அறிஞர்களின் விண்ணப்பங்களைப் பரிந்துரைக்கலாம்.

5. விண்ணப்பப் பரிந்துரைகள் அறிஞர்களின் சிறப்பான பங்களிப்பைத் தெளிவாக எடுத்துக்காட்டுவதாக இருத்தல் வேண்டும். விண்ணப்பங்களோடு நன்னடத்தைச் சான்றிதழ் உரிய அதிகாரிகளால் கையொப்பமிட்டு இணைக்கப்படல் வேண்டும்.

6. விண்ணப்பங்களைப் பரிந்துரைக்கும்போது, அறிஞர்கள் அத்துறையில் சிறப்பான பணி செய்திருப்பதை வலியுறுத்தல் வேண்டும். இளம் அறிஞர் விருதுக்கான விண்ணப்பதாரர் செம்மொழித் தமிழில் ஏதேனும் ஒரு துறைக்கு அரிய பங்களிப்பைச் செய்திருக்க வேண்டும்.

7. ஏற்கனவே இந்த விருதுகளில் ஒன்றைப் பெற்றவர் மீண்டும் விண்ணப்பிக்கக் கூடாது. இறந்துபோன அறிஞர்கள் யாருக்கும் இவ்விருது அளிக்கப்பெறாது. ஏதேனும் குற்றவியல் வழக்கில் ஏற்கனவே தண்டிக்கப்பட்டவருக்கும், வழக்குமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருப்பவருக்கும் விருது வழங்கப்பெறமாட்டாது. எனவே, விண்ணப்பதாரர் இதுபற்றிய உண்மையைக் கட்டாயமாக விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும். தவறான தகவல்கள் தரப்பட்டிருக்குமாயின், அதற்கு விண்ணப்பதாரரே முழுப்பொறுப்பாகக் கருதப்படுவார்.

8. அறிஞர்களை விருதுகளுக்காகப் பரிந்துரை செய்வோர் அதனை வெளியில் தெரியாமல் கமுக்கமாக வைத்துக்கொள்ளல் வேண்டும். விண்ணப்பிக்கும் அறிஞரைப் பற்றிய செய்திகளைப் பல வழிகளிலிருந்து பரிந்துரை செய்வோர் அறிந்துகொள்வது நல்லது. அறிஞர்கள் தனியாகத்தரும் தகவல்கள் எதுவும் பரிந்துரையோடு அனுப்பப்படுதல் கூடாது.

9. அறிஞர் எவரும் தம்மைத் தாமே விருதுக்காக முன்மொழிந்துகொள்ளல் கூடாது.

10. முன்மொழிவுகள் வன்படியிலும், மென்படியிலும் அனுப்பப்படுதல் வேண்டும்.

11. முன்மொழிவுகளைக் குறிப்பிட்டுள்ள படிவத்தில் நிறைவுசெய்து இயக்குநர், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், எண். **40,** நூறடிச் சாலை, சாலைப் போக்குவரத்து நிறுவன வளாகம், தரமணி, சென்னை – **600 113** என்னும் முகவரிக்கு அஞ்சலில் அல்லது awards2021@cict.in என்ற மின்னஞ்சல் முகவரியில் 2021,மே 15ஆம் நாளிற்குள் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

இயக்குநர்